21.01.2025

அ.வ.எண். 82/2021

வாசா.2 - ராசு (எ) பழனிச்சாமி

1 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

நான் என்ன பரிகாரம் கேட்டு இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் அரசாங்கம் உயர் மின் கோபுரம் அமைத்துள்ளது, அதற்கான இழப்பீடு தொகை கொடுத்துள்ளது அந்த இழப்பீடு தொகை கேட்டு நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். எங்களுக்கு தமிழக அரசால் 2 ஏக்கர் 18 சென்ட் நிலம் ஒதுக்கப்பட்டது. அதன் தற்போதைய உட்பிரிவு எண்.426/5 ஆகும். என் தாத்தா ரங்கன் வழக்கு சொத்தில் அனுபவத்தில் இருந்ததை காட்ட ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை. வழக்கு சொத்தில் என்ன நிபந்தனையின் அடிப்படையில் கொடுக்கப்பட்டது என்றால் 20 வருட நிபந்தனையின் பேரில் கொடுக்கப்பட்டது. நான் நிபந்தனை என்ன என்று குறிப்பிட்டு சொல்லாததில் இருந்து நிபந்தனைகள் எதுவும் சொல்லப்படவில்லை என்று தெரியவருகிறது என்றால் சரியல்ல.

எங்களுக்கு கொடுத்த நிபந்தனை பட்டாவின் அசல் எங்களிடம் உள்ளதா என்றால் அதை என் அய்யன் வைத்திருந்தார் அது எங்கு போனது என்று தெரியவில்லை. அந்த பட்டா எப்போது காணாமல் போனது என்று நான் தெரிந்துகொண்டேனா என்றால் 1995 ல் தெரிந்துகொண்டேன். CONDITION பட்டாவில் எத்தனை தென்னை மரங்கள் வைக்கலாம் என்று உத்தரவாகியுள்ளது என்றால் அவ்வாறு உத்தரவு இல்லை அது வானம்பார்த்த பூமி. என் தாத்தா நிபந்தனை பட்டாவில் சொல்லியுள்ள நிபந்தனைகளை பூர்த்தி செய்ததற்கான ஆவணங்கள் நான் இந்நீதிமன்றததில் தாக்கல் செய்யவில்லை, அடங்கல் கேட்டுள்ளேன். என் தாத்தா அனுபவம் செய்ததற்கான நான்கு எல்லை சொல்ல முடியுமா என்றால் வடபுறம் 472, தென்புறம் 476/3, மேல்புறம் மாங்காய் தோப்பு, கிழபுறம் 476/6 ஆகும். 476/6 காலைகளின் உரிமையாளர் பெயர் வையாபுரி. 476/7 காலைக்கு யார் உரிமையாளர் என்றால் கருப்பு அவரது மகன் பெயர் நாகப்பன். என்

தாத்தா சொத்தை விற்பனை செய்ததற்கான வில்லங்க சான்றிதழை நான் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் என் தாத்தா கிரயம் செய்து கொடுத்த கிரய பத்திரத்தின் நகலையும் நான் இந்நீதிமன்றத்தில் இதுவரை தாக்கல் செய்யவில்லை.

எந்த தேதியில் கிரய ஆவணம் ஏற்படுத்தப்பட்டது என்று நான் எனது வழக்குரையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் ஆமாம். வழக்கு சொத்து இருக்கும் இடத்தில் இருந்து நான் 2 கி.மீ தொலைவில் வசிக்கிறேன். என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் 4 வது பத்தியில் எந்த தேதியில் சூலூர் தாசில்தாரிடம் மனு கொடுத்தேன் என்று நான் சொல்லவில்லை என்றால் ஆமாம். நான் போதுமான ஆவணங்களை சமர்ப்பிக்காததால் 4, 5 பிரதிவாதிகளுக்கு எதிராக எனது வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. வருவாய் ஆவணங்களை நான் தாக்கல் செய்யாததால் எனது வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

<u>1ம் பிரதிவாதி தரப்பில் வா.சா.1 யை குறுக்குவிசாரணை செய்ய மனுத்தாக்கல் செய்யப்பட்டு அந்த மனு செலவுத்தொகையின் பெயரில் அனுமதிக்கப்பட்டு குறுக்குவிசாரணை தொடர்ச்சி</u>

எனக்கு மேற்படி அரசாங்கத்தில் TOWER LINE அமைக்க நிலம் எடுக்கப்பட்டது 2019 ல் தெரியவந்தது. என் தாத்தாவிற்கு பின்பு என் அப்பா, என் அப்பாவிற்கு பின்பு நாங்கள் என வாரிசு அடிப்படையில் சொத்தில் பட்டா பெயர் மாற்றம் செய்ய நான் தாசில்தாரிடம் மனு எதுவும் கொடுக்கவில்லை, நேரடியாக வழக்கு தாக்கல் செய்துவிட்டேன். தாவா சொத்தில் இழப்பீட்டு தொகை கேட்டு நான் தாசில்தாரிடம் மனு கொடுத்த போது அதற்கான உரிய ஆவணங்கள் தாக்கல் செய்யாமல் என்னுடைய மனுவில் இது பஞ்சமி நிலம் கிடையாது, நிபந்தனை பட்டா நிலம் கிடையாது என்று தாசில்தார் எனது மனுவை தள்ளுபடி செய்து ஒரு அறிக்கை கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல, இது நிபந்தனை பட்டா நிலம். மேற்படி விவரங்களை மறைத்து நான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால்

சரியல்ல. நான் இந்த வழக்கு சொத்து சம்மந்தமாக நடவடிக்கை எடுப்பதற்கு முன்பு பாலகோபாலகிருஷ்ணன் என்பவர் வழக்கு சொத்து சம்மந்தமாக ஒரு மனு கொடுத்தார் என்றால் எனக்கு தெரியாது. அவர் யார் என்று எனக்கு தெரியாது. அவர் தூண்டுதலின் பேரில் தான் நான் இந்த வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல.

1983 ல் எஸ்.வி.சுப்பிரமணியம் பெயரில் ஒரு கிரய பத்திரம் ஏற்பட்டது என்றால் அப்படி எதுவும் கிரயம் செய்யவில்லை. மேற்படி கிரயப் பத்திரம் பொறுத்து மோசடியானது என்று என் வழக்கில் நான் சொல்லியுள்ளேன். அந்த மோசடியான கிரயத்திற்கு எதிராக நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். நான் அந்த கிரயப் பத்திரத்தின் மீது கிரிமினல் நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை. இந்த வழக்கில் மேற்படி கிரய ஆவணம் செல்லத்தக்கது அல்ல என்று பரிகாரம் கேட்டுள்ளேன். 1ம் பிரதிவாதி பெயரில் உள்ள பட்டாவை ரத்து செய்யவும், எனது பெயரில் பட்டா மாறுதல் செய்யவும் நான் இதுவரை மனு கொடுக்கவில்லை. நான் இந்த வழக்கு தாக்கல் செய்ததால் அவ்வாறு எந்த ஒரு மனு கொடுக்கவில்லை. வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Sd/ராசு (எ) பழனிச்சாமி

Taken down by me to open court read over to the witness and acknowledged by her to be corrected.

Sd/Renuga
District Munsif,
Sulur